**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.737/2022 P.W.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சிட்டு | க–பெ | செல்வம் |
| ஊர்: | : | கன்டனூர் | | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கட்டிட வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2026**

**எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கன்டனூரில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரிகளை தெரியும். தேதி மாதம், வருடம் நினைவில்லை. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எனது அம்மா செல்லாயி என்பவர் வேலை பார்த்ததற்காக கூலி தொகை சீனி என்பவரிடம் அவரின் வீட்டில் சென்று கேட்டதற்கு அசிங்கமான வார்த்தைகளால் திட்டி சீனி என்பவரி மனைவி சின்னம்மா என்பவர் எனது தாயாரை செறுப்பால் அடித்தும், உடன் சென்ற எனது தகப்பனார் கருப்பையாவை கட்டை கம்பால் சீனி என்பவர் அடித்து காயப்படுத்திவிட்டார். பின்னர் சம்பவத்தை கேள்விப்பட்டு நான் அங்கு சென்று காயம்பட்ட எனது பெற்றோர்களை 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். அங்கு இருந்த மருத்துவர்கள் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். மீண்டும் மேல் சிகிக்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

முதல் சாட்சி பாண்டி எனக்கு என்ன உறவு என்றால் உடன் பிறந்த தம்பி. சாட்சி கருப்பையா, செல்லாயி எனது பெற்றோர்கள் என்றால் சரிதான். மற்ற சாட்சிகள் எனக்கு என்ன உறவு என்றால் உறவினர்கள் இல்லை. சாட்சிகள் ராமு, செந்தில், ரமேஷ் ஆகியோகள் உறவினர்களா என்றால் சரிதான். எதிரிகள் உறவினர்கள் என்றால் சரிதான். எனது கணவரின் தம்பி தான் 1ம் எதிரி சீனி என்றால் சரிதான். 1ம்எதிரி சீனிக்கும், எனது தம்பிக்கும் வீட்டு இடம் பிரச்சனை நடந்து விருகிறதா என்றால் இல்லை. எனது கணவருக்கும், 1ம்எதிரிக்கும் வீடு சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வருகிறது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸ் என்னை எங்கு வைத்து காலை 7.00 மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் காரைக்குடி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தாகள், பின்னர் சிவகங்கை அரசு மருத்துவமனையில் வைத்து காலை 10.00 மணிக்கு விசாரணை செய்தார்கள். பின்னர்

மதுரையில் வைத்து இரவு 9.00 மணிக்கு விசாரணை செய்தார்கள். போலீஸ் விசாரணையில் கையொப்பம் ஏதேனும் செய்தேனா என்றால் இல்லை. போலீஸ் விசாரணையில் எனது பெற்றோருக்கு காயம்பட்டு இருப்பதாக தகவல் தெரிந்து நானும், எனது கணவரும், என் தம்பி பாண்டியும் அங்கு சென்ற பார்த்தோம் என்றால் சரிதான். எனது பெற்றோருக்கு காயம்பட்ட தகவலை யார் சொன்னது என்றால் 5 வது தெருவில் உள்ள வாடகைதாரராக உள்ள நபர்கள் சொன்னார்கள். வழக்கு சம்பவம் எதுவும் நடைபெற்வில்லை ஏற்கனவே உள்ள வீடு இடம் பிரச்சனை முன் விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.06 16:48:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.